## நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் - 2010

---

## 1 நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்களுக்கும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை (இ.க.நி)

இ.க.நி 18 இன் பிரகாரம் முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த தற்போதும் உபயோகத்தில் காணப்படுகின்ற மோட்டார் வாகனங்களை மீள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 3,375,652 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவினமானது ஆண்டின் வருமானத்தில் சாட்டுதல் செய்யப்படுவதற்குப் பதிலாக பிழையாக கட்டிட மெருகூட்டலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்குளம் விடுதிக்கட்டிடத் தொகுதி திருத்தம் மற்றும் நிர்மாணம் மற்றும் தலைமைக் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிற்கும் கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,103,055 முற்பணத் தொகையானது வேலை பூர்த்தியடைந்த பின்னர் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக முற்பணமாக தொடர்ந்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 170,330 பெறுமதியில் முன்னைய வருடங்களில் விற்பனை செய்யப்பட்டிருந்த 2 மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விற்பனைப்பட்டியலில் வற்வரி பிழையாகக் கணிப்பீடு செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. வற் இனை கணிப்பீடு செய்வதற்கு முன்னர் தேச நிர்மாணவரி கணிப்பீடு (என்பீரீ) செய்யப்பட வேண்டும். இதன் விளைவாக ஐசீரீஏடீ இற்கு ரூபா 360,934 மேலதிகத் தொகையான வற் இனை மீளாய்வாண்டின் போது வாடிக்கையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படாமல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட நேரிட்டிருந்தது.

(உ) ஐசீரீஏடீ இன் செயற்பாட்டு வருமானமானது அதன் செயற்பாட்டுச் செலவினங்களுடன் பொருந்தாதிருந்ததுடன் மொத்த செயற்பாட்டு இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ மதிப்பாய்வு செய்வதன் மூலம் செயற்பாட்டு முகாமையின் செயற்திறனையும், வினைத்திறனையும் கண்டுகொள்ள முடியாதிருந்தது. இது ஐசீரீஏடீ இன் முகாமையின் செயற்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

(ஊ) ஜேர்மன் மற்றும் யப்பானினால் நிர்மாணிப்பு உபகரணங்கள் பயிற்சி நிலையத்திற்கு (CETRAC) நன்கொடையளிக்கப்பட்ட 1817 நூலகப் புத்தகங்களும் தலைமை காரியாலய நூலகத்தில் பேணப்பட்ட நூலக புத்தக இருப்புகளும் பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1997 ஆம் ஆண்டு முதல் 2004 வரை தேசிய உபகரண இயந்திர அமைப்பு (NEMO) இற்கு வாகனங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் என்பன தொடர்பாக பெறவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 114,529,323 ஆன வாடகைக் கட்டணம் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடனை அறவிடுவதில் காணப்பட்ட மந்தநிலை காரணமாக உரிய பகுதியினரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த வாடகை வருமானம் மற்றும் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய செலவினங்கள் முறையே ரூபா 345,000 மற்றும் ரூபா 1,102,669 ஆன தொகைகளை அறவீடு செய்வதற்கு ஐசீரீஏடீ இனால் முடியாதிருந்தது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 121,147,372 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 120,199,039 அல்லது 99 சதவீதம் 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த மீதியாகக் காணப்பட்டன.

(ஈ) ஐசீரீஏடீ இனால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக பெறவேண்டிய மொத்தத் தொகை ரூபா 22,559,519 ஆகக் காணப்பட்டதுடன் இத் தொகையினை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் இல்லாததன் காரணமாக ரூபா 5,292,643 தொகை அல்லது 24 சதவீதம் அறவிடமுடியாகக் கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | ------------------- | ------------- | -------------------- |
| | | ரூபா | |
| (அ) | வியாபாரக் கடன்பட்டோரும், ஏனைய பெறவேண்டியவைகளும் | 135,931,056 | உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | வியாபாரக் கடன்கொடுத்தோரும், ஏனைய பொறுப்புக்களும் | 5,413,547 | |
| (இ) | வைப்புக்கள் | 1,747,563 | வைப்புப் பற்றுச் சீட்டின் மூலப்பிரதி |
| (ஈ) | செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி | 2,557,267 | விரிவான பட்டோலை |
| (உ) | மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டு மானியங்கள் | 2,663,659 | |
| (ஊ) | உள்நாட்டு இறைவரி | 1,128,270 | |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்

2008 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளின்றி ஐசீரீஏடீ இன் ஊழியர்களுக்கு மிகையூதிய கொடுப்பனவு முற்பணமாக ரூபா 1,510,235 தொகை செலுத்தப்பட்டிருந்தன. இக்கொடுப்பனவுகளிற்காக வரிசை அமைச்சிடமிருந்தும், திறைசேரியிடமிருந்தும் உரிய அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் 2011 மார்ச் 10 வரையிலும் இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ------------------------------------------------ | ------------------------------------- |
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 106 | 2010 ஆம் ஆண்டிற்கான வருமான வரி அறிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்குரிய வரிப் பொறுப்பு ஏற்பாடுகளும் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2007 இன் 15 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சிக்கன சேவைக் கட்டணங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 2 | 2010 ஆம் ஆண்டின் சிக்கன சேவைக் கட்டண அறிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு | 1997 இலிருந்து 2009 வரையான காலப்பகுதிக்குரியதாக தீர்மானிக்கப்பட்ட ரூபா 3,350,000 கூட்டுத்தொகையான கணக்காய்வுக் கட்டணம் ஐசீரீஏடீ இனால் 2011 ஏப்ரல் 28 வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1997 ஜனவரி 24 ஆந் திகதிய பீஈடி 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஐசீரீஏடீ இனால் மீளாய்வாண்டின் போது சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக வாகனம் ஒன்றும் இரண்டு உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த இரு உத்தியோகத்தர்களுக்குமாக மீளாய்வாண்டில் சம்பளமாக ரூபா 281,112 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------------------

### 2.1 நிதி மீளாய்வு

-------------------------------


சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஐசீரீஏடீ இன் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 68,150,192 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 78,445,766 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தது. முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 48,000,000 ஆன மீண்டெழும் மானியத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 49,650,000 அரச மீண்டெழும் மானியத்தினை கணக்கிற்கு எடுத்த பின்னர் ரூபா 10,295,574 ஆல் பற்றாக்குறை அதிகரித்தமையைக் காட்டுகின்றது.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐசீரீஏடீ ஆனது 257 ஊழியர்களை ரூபா 663 மில்லியன் மொத்த சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் அரசாங்கப் பங்களிப்பான ரூபா 55.6 மில்லியன் என்பவற்றை பயன்படுத்தி (மூலதன மற்றும் மீண்டெழும்) பெற்றுக் கொண்ட செயற்பாட்டு பற்றாக்குறையானது ரூபா 78.4 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஆ) ஐசீரீஏடீ இனது மீளாய்வாண்டின் பற்றாக்குறையானது மொத்த சொத்துக்களில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 11.7 சதவீதத்தை கடந்த ஆண்டின் 9.3 சதவீதத்துடன் ஒப்பிடுகின்ற போது 2.4 சதவீதம் பாதகமான நிலையைக் காட்டியது.

(இ) 2010 திசெம்பர் 31 இல் ஐசீரீஏடீ இன் திரண்ட நட்டமானது ரூபா 2,115 மில்லியனாக காணப்பட்டதுடன் ஐசீரீஏடீ ஆனது தொடர்ந்தும் நட்டத்தைப் பெறுவதன் விளைவாக தேறிய சொத்தானது மிகவும் நிர்க்கதியான நிலைக்கு உள்ளாகியிருந்தது. ஐசீரீஏடீ ஆனது அரச நிதி உதவியின்றி தொடர்ந்து செயற்பட முடியாத நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐசீரீஏடீ இன் தேறிய சொத்தானது வீழ்ச்சியடைந்து செல்கின்ற நிலைமையினை பின்வரும் வரைபடம் புலப்படுத்துகின்றது.




(ஈ) கேள்விகளைக் கருத்திற் கொள்ளாது ரூபா 4.3 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தகாரர்களின் பெயர்ப்பட்டியல் புத்தகங்களில் 2000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தன. தகவல்கள் காலாவதியாகியமையினால் அப்புத்தங்களின் விற்பனை விலை குறைப்புச்செய்யப்பட்டமையினால் ஐசீரீஏடீ இற்கு 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 189,953 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. 1365 புத்தகங்களிலும் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் ஏற்கனவே காலாவதியாகியிருந்தமையினால் அறவீடு செய்வதற்கிருந்த கிரயமான ரூபா 2.9 மில்லியனின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது.

**2.2.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 1,747,563 பெறுமதியான வெளிநிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளதுடன் வைப்புப் பணத்திற்குரிய மூலப்பிரதி ஐசீரீஏடீ இல் காணப்படாத காரணத்தினால் இந்த வைப்புப்பணத்தை மீளப்பெறுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.

(ஆ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து ஐசீரீஏடீ இற்கு கிடைக்கவேண்டிய (ஜீஎஸ்ரீ , வற் , என்எஸ்எல் மற்றும் முத்திரை வரி) ரூபா 1,128,270 தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருட்களை அல்லது சேவைகள் கொள்வனவு செய்வதன் பொருட்டு வழங்கப்பட்ட ரூபா 8,731,909 தொகையான முற்பணத் தொகையானது 5 ஆண்டுகளிற்கும் மேலான காலத்திலிருந்து தீர்க்கப்படாமல் காணப்படுகின்றது.

(ஈ) ஐந்தொகையின்படி ரூபா 194 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் காணப்பட்டதுடன் இது மொத்தச் சொத்துக்களில் 29 சதவீதமாகவும் நடைமுறைச் சொத்துக்களில் 85 வீதமாகவும் காணப்படுகின்றது.

(உ) ஐசீரீஏடீ இற்கு உரித்தற்ற காணியில் இரண்டு ஓய்வு விடுதிகள் ரூபா 15,678,657 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந் நிர்மாணிப்புக் கிரயம் ஒரு சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கல்குளம் நிர்மாண இயந்திரப் பயிற்சி நிலைய வளங்களின் பாவனை

------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) 31 விடயங்களில் 14 விடயங்கள் (வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள்) பழுதுபார்க்கக் கூடிய மட்டத்தில் இச்சொத்துக்கள் காணப்படுகின்றமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டதுடன் இதன் காரணமாக நிறுவனத்திற்கு எரிபொருளுடன் வாடகைக்கு அல்லது எரிபொருளில்லாமல் வாடகைக்கு வழங்குதலின் கீழ் முறையே ரூபா 24.5 மில்லியன் மற்றும் ரூபா 46 மில்லியன் வருமானங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நிறுவக முகாமையினால் வளங்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நிர்மாணிப்பு பகுதியில் கனரக வாகனங்களின் பயிற்சிக்கான அரசிற்குச் சொந்தமான ஒரே நிறுவனமாக நிர்மாண இயந்திர பயிற்சி நிலையம் காணப்பட்ட போதிலும் ஐசீரீஏடீ இனால் அதனது உற்பத்தி சேவைகளை செயற்திறனான அளவில் மேற்கொள்வதற்கான விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

**2.2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------------

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறானவற்றிற்கு இடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 3 முறைமைகளும், கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஐசீரீஏடீ இன் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்

(இ) பாதீடு

(ஈ) இலக்குகளிற்கு எதிரான செலாற்றல் அளவீடு

(உ) முற்பணத்தைத் தீர்த்தல்.

(ஊ) கணக்கீட்டுப் பதிவுகளை பேணுதல்.